கற்பகம்
திங்கள் இதழ்
Katpakam
விலை ரூபா 10.00

## குறளமுதம்–92

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதத் தரும்.

**அதிகாரம்–10 அறத்துப்பால் இனியவைகூறல்**

அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்

முகம் மலர்ந்து இன்சொல் உடையவனாக இருக்கப்பெற்றால், அது, மனமுவந்து ஒரு பொருளைக் கொடுத்தலைக் காட்டிலும் நல்லதாகும்.

மலர்-08 செப்ரெம்பர் - 2016 இதழ்-92

# கல்விக்காக பெருமளவு நிதியை ஒதுக்குவது மகிழ்வைத் தருகிறது

### கூட்டுறவுதினவிழாவில் அமைச்சர் ஐங்கரநேசன்



கூட்டுறவு கொள்கைகளுக்கு அமைய கல்விப் பயிற்சியளிப்பும் தகவல் தொடர்பும், சமூகத்தின் மீதான அக்கறை என்ற நோக்கங்களை மனதில் கொண்டு பனை தென்னை வள கூட்டுறவு அழைப்புக்குள் வட மாகாணத்தில் செயற்பட்டபோதிலும் யாழ். மாவட்ட பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் பிரமிக்கத்தக்க வகையில் நலத் திட்டங்களை உருவாக்கி அத் திட்டங்களுக்கான நிதிகளை ஏற்கனவே திரட்டி வங்கிகளில் வைப்புச் செய்ததன் பயனாக இன்று அந்நிதியில் அங்கத்தவர், பணியாளர்கள், அவர்கள் சார்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கு கல்விக் கொடையாக பெருந் தொகையான பணப்பரிசில்களையும் பொருட்களையும் வழங்கிய காட்சி எனது மனதைத் தொட்டுள்ளது.

இவ்வாறு குறிப்பிட்டார் வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் திரு பொ.ஐங்கரநேசன் அவர்கள்.

சமாசத்தால் நடத்தப்பட்ட 94வது சர்வதேச கூட்டுறவுதின விழா மற்றும் கௌரவிப்பு விழா நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சமாசத் தலைவர் திரு நா.கணேசன் தலைமையில் சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் (2ம் பக்கம் பார்க்க)

## பனை எழுச்சிவார கண்காட்சி; விற்பனை 19 இலட்சம் ரூபா !

வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சின் ஏற்பாட்டில் கடந்த வருடம் முதல் பனை எழுச்சி வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஜூலை 22-28 வரை நடைபெறும் இக்கண்காட்சி இவ்வருடமும் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

நல்லூர் சங்கிலியின் பூங்காவில் நடைபெற்ற இக்கண்காட்சியில் வடமாகாணத்தைச் சேர்ந்த 5 மாவட்டங்களிலும் செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்களும் சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்தியசேவைக் கூட்டுறவுச் சங்கமும் பனை அபிவிருத்திச் சபையும் தமது உற்பத்திகள் மற்றும் முயற்சிகளை காட்சிப்படுத்தியதோடு, விற்பனையிலும் ஈடுபட்டிருந்தன. (7ம் பக்கம் பார்க்க)

## சித்த மருத்துவ சங்கத்திற்கு நவீன உற்பத்தி தொழிற்சாலை!

யாழ். மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்தியசேவைக் கூட்டுறவுச் சங்கம் பண்டத்தரிப்பு பகுதியில் புதிய கட்டடம் ஒன்றை அமைத்துள்ளது.

இச்சங்கம் தனது செயற்பாட்டை விரிபடுத்தும் நோக்கோடு கனேடிய அரசின் நிதி உதவியோடு சுமார் ரூபா 1 கோடியே 50 இலட்சம் பெறுமதியில் நவீன இயந்திர உபகரணங்களோடு கூடிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு, இலங்கைக்கான கனேடிய தூதவரால் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இச்சங்கம் இதுவரை கொக்குவில், கே.கே.எஸ். வீதியில் தனது பணிமனையையும் உற்பத்தி நிலையத்தையும் (7ம் பக்கம் பார்க்க)

**சிந்தனைத்துளி**

"ஒரு மனிதனிடம் சகிப்புத் தன்மை இல்லை எனில் அவன் அனைத்தையும் இழந்து விடுவான்."

# கற்பகக்கரு

## கூட்டுறவு நிலைத்திருக்க.....

94வது அனைத்துலக கூட்டுறவு தினம் உலகமெங்கும் கூட்டுறவாளர்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது. 1844ம் ஆண்டு முதலாளித்துவ நாடாக இருந்த இங்கிலாந்து தேசத்தில தொழிலாளர்களின் உரிமைக்காக குரல்கொடுக்க எவருமே முன்வராத வேளையில் ஏழைத் தொழிலாளியின் மகனாக இருந்த றொபேட் ஓவன் என்பவர் இம்மக்களின் துன்ப நிலையைப் போக்க முன்வந்தார்.

கூட்டுறவின் தந்தை என உலக மக்களால் இன்று அழைக்கப்படுகின்ற றொபேட் ஓவன் அவர்கள் வாழ்ந்த காலத்தில் கூட்டுறவு இயக்கங்கள் பெரிதாக வளர்ச்சி பெறவில்லை. காரணம் கூட்டுறவு தொடர்பான அறிவினை அல்லது கூட்டுறவின்மூலம் அளப்பரிய நலன்களைப் பெறமுடியும் என்ற விடயத்தை உணர்ந்து கொள்ளமுடியாமை எனக்கூறலாம்

றொபேட் ஓவன் மரணிக்கின்ற நேரத்தில், உலக மக்களுக்குத் தெரிவித்த செய்தியானது, "நான் காலத்தால் முந்திப் பிறந்துவிட்டேன். ஆனால் நான் சொல்லவேண்டிய கருத்துக்களை சொல்லிச் செல்கின்றேன். எனது கூட்டுறவு தொடர்பான சிந்தனைகளை என்றோ ஒரு நாள் உலகமக்கள் உணர்ந்துகொள்வார்கள்" எனத் தெரிவித்தார்.

அவரின் கூற்று இன்று உலக மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஒருவர் பலருக்காகவும் பலர் ஒருவருக்காகவும் பாடுபட்டு தங்களுடைய தேவைகளை ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்கின்ற ஒரு சிறந்த அமைப்பு கூட்டுறவு என்பதையும், கூட்டுறவு ஏழைகளின் தோழன் என்பதுவும் நடைமுறையில் நிரூபிக்கப்பட்டு வருகின்றது.

இக்கூட்டுறவு அமைப்பு முறையானது பனை தென்னை வளம் சார்ந்த அங்கத்தவர்களுக்கு பெரிதும் பொருந்தக்கூடிய ஒரு துறையாக இருப்பதையும் நாம் 1972ம் ஆண்டுக்கு பின்னர் உணர்ந்து கொள்கின்றோம். காரணம், கூட்டுறவுத்துறைக்குள் தம்மை இணைத்துக் கொள்வதற்கு முன்னர் ஒவ்வொரு அங்கத்தவரும் வாழ்க்கை முறை, அவர்களின் பொருளாதார வளம், கல்வி, கலாச்சாரம், சுகாதாரம் என்பவற்றில் எங்கே நின்றார்கள் என்பதையும், இக்கூட்டுறவுத் துறைக்குள் தம்மை இணைத்துக்கொண்டபின்பு அத்துறைகளில் இன்று அவர்களின் மேலான நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், றொபேட் ஓவன் அன்று கூறிய விடயங்கள் எவ்வளவுதூரம் தீர்க்கதரிசனமானவை என்பது துலங்கும்.

கூடி வாழ்வோம் கோடி பயன்பெறுவோம், ஒன்றுபட்டு உழைப்போம் ஒற்றுமையாய் வாழ்வோம் எனும் கூட்டுறவுத் தத்துவங்களுக்கு அமையவும், யப்பானிய முகாமைத்துவமாகிய "பலபேர் சேர்ந்து எடுக்கும் தீர்மானமே சிறந்த தீர்மானமாகும்" எனும் கருத்து முன்பே கூட்டுறவு அறிஞர்களால் சொல்லப்பட்டிருப்பதாலும் கூட்டுறவுத் துறையிலும் பலர்கூடி தமது கருத்துக்களை தெரிவித்து, சாதக பாதகங்களை ஆராய்ந்து, இறுதியாக நல்ல முடிவினை எடுத்து, அதனை செயற்படுத்துவதன் மூலமே கூட்டுறவு நிறுவனங்கள் நிலைத்திருந்து தமது அங்கத்தவர்களுக்கும் தாம் சார்ந்த சமூகத்துக்கும் அளப்பரிய சேவைகளை ஆற்றமுடியும் என்பதுடன், கூட்டுறவு காலகாலத்திற்கும் உலக மக்களால் போற்றப்படும் என்பதையும் கூட்டுறவாளர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

ஆசிரியர்

## கல்விக்காக ............... ( 1ம் பக்கத் தொடர்ச்சி )

இம் மாதம் 10ம் திகதி நடைபெற்ற இவ்விழாவில் அமைச்சர் தொடர்ந்து பேசுகையில்,

வடமாகாணத்தில் கூட்டுறவு அமைச்சைப் பொறுப்பேற்ற பின்னர் அநேகமான சங்கங்களிலிருந்து தினந்தோறும் குறைபாடுகள் தாங்கிய கடிதங்கள் கூட்டுறவு அமைச்சுக்கு கிடைத்த வண்ணமே உள்ளன. ஆனால் பனை தென்னை வள கூட்டுறவு அமைப்புக்களிலிருந்து குறைபாடுகள் தாங்கிய கடிதங்கள் எனக்கு கிடைப்பது மிக அரிதே. இவ்விடயத்திலிருந்தே பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வகிப்புத் திறன் பணியாளர்களின் பணித்திறன் என்பவற்றை அறியக்கூடியதாக உள்ளது எனவும் பாராட்டினார்.

முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் திரு நா.வேதநாயகன் அவர்கள் பேசுகையில்,

வடமாகாணத்தில் சிறப்பாகச் செயற்படுகின்ற கூட்டுறவு அமைப்புக்களில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் முதன்மையானது. கூட்டுறவு கொள்கைகளுக்கு அமைய தமது அங்கத்தவர்கள், அங்கத்தவர்கள் சார்ந்தோரின் சமூக மேம்பாடு கருதிய பொருளாதார நலத்திட்டங்களை பொருத்தமான நேரங்களில் பொருத்தமாக மாற்றி காலமாற்றத்திற்கு ஏற்ப தம்மை நிலைநிறுத்தி வருகின்றமை பாராட்டுக்குரியதே என்றார்.

வடமாகாண மதுவரி உதவி ஆணையாளர் திரு நா.சோதிநாதன் அவர்கள் தனது உரையின்போது, இலங்கையில் மதுவோடு சம்பந்தப்பட்ட கூட்டுறவு அமைப்பாக பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் வடமாகாணத்தில்தான் சிறப்பாக செயற்பட்டு வருகின்றன. எனது அரச சேவையில் நான் மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற பகுதிகளில் பணியாற்றி இருக்கின்றேன். அங்கு பனந்தொழில் சம்பந்தப்பட்டவர்கள் படுகின்ற வேதனைகள், துன்பங்களை சொல்லி முடிக்கமுடியாது. ஏனெனில் அங்கு வடக்கு மாணத்தில் இருப்பது போல கூட்டுறவு அமைப்பு கிடையாது அங்கு பணம் படைத்தவர்கள் ரெண்டர் மூலம் கள் விற்பதற்கான அனுமதியைப் பெற்று இத்தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திகளை குறைந்த விலையில் கொள்வனவு செய்வதால் அவர்கள் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். ஆனால் வடமாகாணத்தில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் செயற்படுகின்ற 19 பனை தென்னை வள சங்கங்களும் அதனுடன் ஒத்த கொத்தணிகள், சமாசம் என்பவற்றினது செயற்பாடுகள் எப்படி அமைந்திருக்கின்றது என்பதை நான் இன்று இம் மண்டபத்தில் பரிசுப் பொருட்களுடைய தொகையைப் பார்த்தே புரிந்துகொண்டேன். எத்தனையோ நிகழ்வுகளுக்கு நான் சென்றிருக்கின்றேன். ஆனால் இன்றைய நிகழ்வு வித்தியாசமான சிறந்த நிகழ்வாகும். ஏனெனில் முன்பள்ளி மாணவர் கல்வி தொடக்கம் பல்கலைக்கழகம் வரைக்கும் கல்வி பயிலும் அங்கத்தவர். பணியாளர்களின் பிள்ளைகளுக்காக பணப்பரிசுகளும் பரிசுப் பொருட்களும் வழங்கி கௌரவிப்பது பாராட்டுக்குரியது. மதுவரித் திணைக்களம் என்றென்றும் இவ்வகைச் சங்கங்களுக்க தனது பூரணமான ஒத்துழைப்பை வழங்கும் எனவும் தெரிவித்தார்.

சமாசத் தலைவர் திரு நா.கணேசன் அவர்கள் தனது உரையில், வடமாகாண பனை தென்னை வள சமாசமானது தனது அங்கத்தவர், பணியாளர் சமூக நல மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கடந்த 6 வருடங்களாக சர்வதேச கூட்டுறவு தின விழாவை வெகு சிறப்பாக நடத்தி வருகின்றது. இவ் வருடமும் 94வது சர்வதேச கூட்டுறவுதின விழாவை முன்னிட்டு அங்கத்தவர். பணியாளர்கள்,

(3ம் பக்கம் பார்க்க)

# சமாசத்தால் நடத்தப்பட்ட 94வது கூட்டுறவுதின விழாவில் கௌரவிக்கப்பட்டோர்

94வது சர்வதேச கூட்டுறவுதின விழாவை முன்னிட்டு வட மாகாண ப.தெ.வ.அ.கூ.ச. சமாசத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றோர் மற்றும் கௌரவிக்கப்பட்டோர் விபரம் வருமாறு,

**போட்டிகள்:**

**பணியாளர் பேச்சு:** 1ம் இடம் தெ.தவராசா-கோண்டாவில் சங்கம், 2ம் இடம் -ம.கார்த்தீபன்-அச்சுவேலி சங்கம், 3ம் இடம் - சு.சிறீகாந்- அச்சுவேலி சங்கம், க.கமலநாதன்-காரைநகர் சங்கம்.

**பணியாளர் கவிதைப் போட்டி**

1ம் இடம் - ம.கார்த்தீபன்- அச்சுவேலி சங்கம், 2ம் இடம்- தெ.தவராசா- கோண்டாவில் சங்கம், 3ம் இடம் - த.கமலநாதன்- காரைநகர் சங்கம்.

**பணியாளர் கட்டுரைப்போட்டி:-**

1ம் இடம் - சு.சறீகாந்- அச்சுவேலி சங்கம், 2ம் இடம்: ப.சுதாகரன்- காரைநகர் சங்கம், 3ம் இடம்: தெ.தவராசா- கோண்டாவில் சங்கம்.

**மகளிர்குழு கவிதை போட்டி:**

1ம் இடம்: திருமதி வி.பூமணி- மானிப்பாய் சங்கம், 2ம் இடம்: திருமதி மன்றோமக்ரலின்- கோண்டாவில் சங்கம், 3ம் இடம்: திருமதி இ.சுபாங்கி- அச்சுவேலி சங்கம், வ.வாசுகி- மானிப்பாய் சங்கம்.

**கட்டுரைப்போட்டி:**

1ம் இடம் திருமதி மன்றோமக்ரலின்- கோண்டாவில் சங்கம், 2ம் இடம் செ.சிவதர்சினி- சுன்னாகம் சங்கம், 3ம் இடம்: திருமதி வி.பூமணி - மானிப்பாய் சங்கம்.

**கயிறிழுத்தல் போட்டி:**

**அங்கத்தவர், பணியாளர்:**

1ம் இடம்: சுன்னாகம் சங்கம்,
2ம் இடம்: சாவகச்சேரி சங்கம்.

**மகளிர் குழு:**

1ம் இடம்: சுன்னாகம் சங்கம்
2ம் இடம்: சித்த மருத்துவ சங்கம்

**துடுப்பாட்டப் போட்டி:**

1ம் இடம்: தென். கொத்தணி.
2ம் இடம்: பண்டத்தரிப்பு சங்கம்

**முன்பள்ளி மாணவர்கள் போட்டி**

**குழு நடனப்போட்டி**

1ம் இடம்: காரைநகர் சங்கம்.
2ம் இடம்: சங்கானை சங்கம்.

**திருக்குறள் மனனப்போட்டி**

1ம் இடம்: லூ.வர்சனா-பண்டத்தரிப்பு
2ம் இடம்: கி.ஜெரன்சியா-பண்டத்.
3ம் இடம்: ச.சஸ்மிதா- சுன்னாகம்

**சிறந்த சங்கத் தெரிவு:-**

1ம் இடம்: அச்சுவேலி சங்கம்
2ம் இடம் பண்டத்தரிப்பு சங்கம்
3ம் இடம்: கோண்டாவில் சங்கம்

**சிறந்த கொத்தணித் தெரிவு:**

1ம் இடம்: வலிகாமம் கொத்தணி
2ம் இடம்: தென்மராட்சி கொத்.

அத்துடன் விழாவில் கௌரவிக்கப்பட்ட சிறந்த அங்கத்தவர், பணியாளர், ஓய்வுபெற்ற தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் மற்றும் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் சித்திபெற்ற மாணவர்கள், பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்கள் ஆகியோரின் விபரம் வருமாறு,

**சிறந்த அங்கத்தவர், பணியாளர் மற்றும் சங்கத்தின் பெயர் முறையே,**

க.சிறிகாந்தகுமார், திருமதி க.நிசாந்தினி-யாழ்ப்பாணம், திரு மு.கருணாகரன், திரு பொ.இராசேந்திரம்- அரியாலை, திரு இ.ஜெகதீஸ்வரன், திரு வ.மயில்வாகனம்-கோப்பாய், திரு வி.யோண்மேரி, திரு தி.எமிலியானஸ்-ஊர்காவற்றுறை, திரு ஜே.யே.ஜென்சில், திரு ந.சசீகரன்- வேலணை, திரு யோ.திருவருட்சீலன், திரு இ.ஜெயக்குமார்-அனலைதீவு, திரு இ.பிரதீபன், திருமதி வ.புஸ்பராணி- மானிப்பாய், திரு வி.தனீஸ்வரன், திருதி.தேவராசா -சங்கானை, திரு மு.பரமேஸ்வரன், திரு மா.பாலசிங்கம்- காரைநகர், திரு அ.பெ.ஜெகராசா, திரு ஆ.கிறிஸ்துராசா-பண்டத்தரிப்பு, திரு தி.குணசிங்கம், திரு ச.அன்ரனியேர்சப் - சுன்னாகம், திரு க.பூபாலசிங்கம், திரு க.லோகராசா- தெல்லிப்பளை, திரு செ.அம்பிகைநாதன், திரு ந.சிறீஸ்வரன்- கோண்டாவில், திரு செ.சிவசங்கரன், திருமதி நா.ஷாமினி - பருத்தித்துறை, திரு கி.கனகரத்தினம், திருமதி சூ.சூரியகலா- கரவெட்டி, திரு கொ.கணேசலிங்கம், திருமதி த.லதாசந்திரிகா - அச்சுவேலி, திரு க.கருணேஸ்வரன், திரு க. இராசபுவனேஸ்வரன்- சாவகச்சேரி, திரு கி.தயாபரன், திரு து.தங்கநாதான்- கொடிகாமம், திரு ப.விஜயராசா- வலிகாமம் கொத்தணி, திரு ஆ.மகேந்திரன்- தென். கொத்தணி, திரு கு.ஸ்ரீகண்நாதன் - சித்த மருத்துவம், திரு அ.லூயிஸ் - சமாசம்.

**உயர்கல்வி வாய்ப்பு பெற்ற 11 மாணவர்கள் விபரம்:-**

க.பிறின்சியா-சாவகச்சேரி, த.சுவேதா- சாவகச்சேரி, இ.நிதர்சனா- அரியாலை, கு.சாரங்கன்- கொடிகாமம், இ.நிரோஷன்-பருத்தித்துறை, கி.சுவஸ்திகா-பருத்தித்துறை, ந.காருண்யா- பருத்தித்துறை, க.செந்துஜன்- கரவெட்டி, ர.பவதாரணி-கரவெட்டி, க.லோஜின் -மானிப்பாய், வ.ரம்யா - மானிப்பாய்.

**5ம் ஆண்டு புலமைப்பரிசில் சித்திபெற்ற 15 மாணவர்கள் பெயரும் பெற்ற புள்ளிகளும்:-**

ஜீ.மேனுஷா-161-அரியாலை, ச.அபர்ணா-154-தெல்லிப்பளை, கு.துலக்ஷனா-163-கோண்டாவில், ஜே.ஜஸ்ரிமா-177- கோண்டாவில், வே.சஞ்சிகா-154- சுன்னாகம், கு.கனிஷ்ரன்-160- சுன்னாகம், அ.சரண்யா-155- சுன்னாகம், சு.ஜோதிகா-159- பருத்தித்துறை, ச.யாலுஜா-158- பண்டத்தரிப்பு, ஆ.சுனிதா-153- பண்டத்தரிப்பு, ஸ்ரீ.பிரணவன்-180-கரவெட்டி, செ.தனுசியன்-166- கரவெட்டி, கி.இதயதீபன்-166-கரவெட்டி, ர.சரண்-158-கரவெட்டி, கி.தர்சிகன்- 157 - மானிப்பாய்

---

## கல்விக்கு ................ (2ம் பக்கத் தொடர்ச்சி)

மகளிர்குழு உறுப்பினர்கள் ஆகியோர் மட்டத்தில் மண்டப மட்டப் போட்டிகளும் மைதான மட்டப் போட்டிகளான துடுப்பாட்டம், கயிறிழுத்தல் போட்டிகளும் குறிப்பாக பெண்களுக்கும் கயிறிழுத்தல் போட்டியை நடத்தி கலந்து கொண்ட அனைவருக்கும் பரிசுப் பொருள் வழங்குவது ஓர் சிறந்த செயற்பாடாகும். மேலும் இன்றைய நிகழ்வுக்கு சமாசம் அழைத்திருக்கின்ற முதன்மை விருந்தினர்களாகிய கூட்டுறவு அமைச்சர், அரச அதிபர், மதுவரி ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் அனைவரையும் அழைத்ததன் நோக்கம், எமது சங்கங்கள் இன்று பாரிய வரிச்சுமை, கிளை நிலையங்களை அமைப்பதற்கான அனுமதி பெறல், திக்கம் வடிசாலை இயக்கம் போன்றவற்றில் பெரும் நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டிருப்பதை இவர்களுக்கு தெரியப்படுத்தி அதற்கான நல்லதொரு தீர்வினை பெற்றுக் கொள்ளவேண்டும் என்று தீர்மானித்தே இவர்களை அழைத்திருக்கின்றோம். மேற் குறிப்பிட்ட பிரச்சினைகளை உரியவர்கள் தீர்த்துவைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

சமாசத்தின் ஆரம்ப கால செயலாளரான கற்பகக் காவலர் திரு க.நடராசா ஆசிரியர் அவரகள் தனதுரையில்,

1972ம் ஆண்டு காலப் பகுதியில் (7ம் பக்கம் பார்க்க)



## சமாசத்தால் இம்மாதம் 10ம் திகதி நடத்தப்ப





## ...பட்ட 94வது சர்வதேச கூட்டுறவுதினவிழா நிகழ்வுகளின் பதிவுகள்

























# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் துணை விதிகள் 8

சென்ற இதழ் தொடர்ச்சி

## 24. சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம்

24.8 ஒவ்வொரு பொதுச்சபைக் கூட்ட அறிவித்தலும் அக்கூட்ட நிகழ்ச்சி நிரலினையும் அக் கூட்டத்தில் ஆராயவுள்ள முன்மொழிதல் ஏதுமிருப்பின் அவற்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

24.9 தலைவர் அல்லது அவர் சமுகமளிக்காதவிடத்து துணைத்தலைவர் அல்லது இருவரும் சமூகமளிக்காதவிடத்துப் பொது விருப்பு மூலம் தெரிந்தெடுக்கப்பட்ட யாராவது ஒரு பிரதிநிதி பொதுச்சபைக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கலாம்.

## 25. ஆண்டுப் பொதுச்சபைக் கூட்டம்

25.1 சங்கத்தின் நிதி வருடம் முடிந்து மூன்று மாத எல்லைக்குள் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தினை நெறியாளர் குழு ஆண்டு தோறும் கூட்டுதல் வேண்டும்.

25.2 துணை விதி 24.2 குறித்த பொதுச்சபைக் கூட்டத்தின் அதிகாரங்கள் யாவற்றையும் ஆண்டுப் பொதுக்கூட்டம் கொண்டிருக்கும். அதன் விசேட கடமைகளாவன,

அ. நெறியாளர் குழுவின் ஆண்டுச் செயற்பாட்டு அறிக்கையினையும் முன்னைய நிதி ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்காய்வு அறிக்கையையும் ஆராய்தல்.

ஆ. கணக்காய்வாளர்களின் கணக்காய்வு அறிக்கையை ஆராய்தல்.

இ. இத் துணைவிதிக்கு அமைவாக ஆண்டு தோறும் இளைப்பாறும் நெறியாளர்களால் ஏற்படும் வெற்றிடங்களையும் அல்லது வேறு விதத்தில் ஏற்படும் வெற்றிடங்களையும் நிரப்புதல்.

ஈ. சென்ற நிதியாண்டில் மேலதிகம் ஈட்டப்பட்டிருப்பின் சட்டத்திற்கும் இத் துணைவிதிகளுக்கும் அமைவாக இவ் இலாபத்தை பகிர்தல்.

உ. கிளைக் குழுக்கள் அல்லது நெறியாளர் குழு அல்லது பொதுச் சபை பிரதிநிதிகள் சமர்ப்பிக்கும் ஏதாவது முன் மொழிதல்களை ஆராய்தல்.

25.3 சங்கத்தின் செயலாளர் நெறியாளர் குழுவின் ஒப்புதலுடன் ஆண்டுப் பொதுக்கூட்டம் பற்றிய அறிவித்தலைக் கிளையின் செயலாளர்களுக்குக் குறைந்தது ஆண்டுப் பொதுச்சபைக் கூட்டத் திகதிக்கு இருபத்தியொரு (21) நாட்களிற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். இவ் அறிவித்தலுடன் மேலே துணைவிதி 25.2 (அ), (ஆ) பிரிவுகளிற் குறிப்பிட்ட ஆவணங்களையும் அனுப்புதல் வேண்டும். அத்தகைய கூட்டத்திற் பிரதிநிதிகள் ஆராய விரும்பும் முன்மொழிவுகளின் பிரதிகளை அனுப்ப வேண்டிய திகதியாக கூட்டம் நடைபெறவுள்ள திகதிக்குப் 14 நாட்களிற்கு முன்னராக ஒரு திகதியையும் அதில் குறிப்பிட வேண்டும். அத்தகைய முன்மொழிதல்கள் எல்லாக் கிளைகளின் பிரதிநிதிகளிற்கும் கூட்டத் திகதிக்கு குறைந்தது ஏழு (7) நாட்களிற்கு முன்னராக அறிவிக்கப்படல் வேண்டும்.

25.4 கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கையையும் கணக்காய்வாளரின் அறிக்கையினையும் கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கு ஏற்றவாறு கிடைக்காதவிடத்து, உட்பிரிவுகள் 25.2 (அ) (இ) (ஈ) (உ) ஆகியவற்றில் குறிப்பிட்ட விடயங்களையும் ஆராய்வதற்காக இப்பிரிவின் உட்பிரிவு 25.1 இற் குறிப்பிட்டதற்கு அமைய ஆண்டுப் பொதுச்சபைக் கூட்டம் கூட்டப்படலாம். மேற்குறித்த அறிக்கைகள் ஆண்டுப் பொதுச்சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படாதவிடத்து ஒரு விசேட பொதுச்சபைக் கூட்டம் அவ்வறிக்கைகள் கிடைத்து மூன்று வார காலத்திற்குள் செயலாளரினால் நெறியாளர் குழுவின் ஒப்புதலுடன் கூட்டப்படலாம். இக்கூட்டத்தில் அவ்வறிக்கைகள் ஆராயப்படுவதோடு, மேலதிகம் பங்கிடுதல் பற்றியும் ஆராயப்படலாம்.

## 26. விசேட பொதுச் சபைக் கூட்டம்.

26.1 ஒவ்வொரு விசேடபொதுச் சபைக் கூட்டம் தொடர்பாகவும் பொதுச்சபை உறுப்பினர்களுக்கு குறைந்தது இருவார (2) அறிவித்தல் கொடுக்கப்படல் வேண்டும்.

26.2 நெறியாளர்குழு சங்கத்தின் தலைவர் அல்லது அவர் இல்லாதவிடத்துத் துணைத்தலைவர் ஆகியோரின் பணிப்பின்பேரில் அல்லது பொதுச் சபையின் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 எண்ணிக்கையுள்ள உறுப்பினர்களாற் சங்கத்தின் அலுவல்கள் தொடர்பான ஏதாவதொரு விடயம் பற்றி ஆராய்வதற்காகப் பொதுச்சபைக் கூட்டமொன்றைக் கூட்டும்படி விடுக்கப்படும் கோரிக்கை ஒன்று கிடைத்தவிடத்துப் பொதுச்செயலாளர் விசேட பொதுச்சபைக் கூட்டத்தினைக் கூட்டுதல் வேண்டும். மேற்குறித்த வகையான கோரிக்கையில் விசேட பொதுச்சபைக் கூட்டத்திற் சமர்ப்பிக்க விரும்பும் முன்மொழிதல்கள் அக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலுடன் அனுப்பப்படல் வேண்டும். அக் கோரிக்கை கிடைத்த திகதியிலிருந்து ஆறு வார (6) காலத்திற்குள் பொதுச்செயலாளர் கூட்டத்தினைக் கூட்டுதல் வேண்டும்.

26.3 சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டங்கள் என்ற துணைவிதியிற் சொல்லப்பட்டுள்ள எல்லா அதிகாரங்களையும் ஒவ்வொரு விசேட பொதுச் சபைக் கூட்டமும் கொண்டிருக்கும். (வளரும்)

**கல்விக்காக ................ ( 1ம் பக்கத் தொடர்ச்சி )**

இச்சங்கங்களை உருவாக்கும் போது நான் பட்ட துன்பங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இருப்பினும் விடாமுயற்சியோடு நாம் செயற்பட்டதன் பயனை இன்று பார்க்கின்றேன். அப்போது என்னோடு கூட இருந்து பணியாற்றிய சமூகப் பற்றுக்கொண்ட தொண்டர்கள் எல்லோரும் இறந்துவிட்டனர். நான் மட்டுமே தற்போது எஞ்சியிருக்கின்றேன். இந்நிறுவனங்களை உருவாக்கி, அங்கத்தவர்களையெல்லாம் ஒன்று சேர்த்து, இப்பனைவளம் முற்று முழுதாக எமக்கே உரித்தான வளம் என்ற எண்ணத்தை அங்கத்தவர் மனதில் விதைத்து, அதனூடாக அவர்களும் செயற்பட்டுக்கொண்டதன் பயனே இன்றைய இவ்விழா என எண்ணும்போது நான் பூரிப்படைகின்றேன். இந் நிறுவனங்களை உருவாக்கி, அந்நிறுவன வளர்ச்சிக்காக கற்பகம் என்ற சஞ்சிகையை வெளியிட்டு, அதனூடாக இத்துறைசார்ந்தோருக்கு கூட்டுறவு தொடர்பான செய்திகளை பிரசுரித்து அவர்கள் கூட்டுறவு சார்ந்த அறிவைப் பெற வழி அமைத்ததோடு, பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பத்தாண்டு மலர் வெளியிடப்பட்டதுடன் அதன் ஆசிரியராக நானே பணியாற்றி இருந்தேன். அம்மலரின் முன் அட்டைப்படத்தில் ஒரு சீவல் தொழிலாளியின் படத்துடன் அவர்கள் பிள்ளைகள் கல்வியில் முன்னேற்றம் காணவேண்டும் என்ற கருத்தினை வெளிப்படுத்தியிருந்தேன். இன்று இம்மண்டபத்திலே அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் கல்விகற்ற. கல்வியில் புலமை பெற்ற மாணவச் செல்வங்களே. குறிப்பாக பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட மாணவன், பொறியியல்பீட மாணவன், நுண்கலைப் பீட மாணவ மாணவிகள், புலமைப்பரிசில் சித்திபெற்ற மாணவர்கள், முன்பள்ளி மாணவர்கள் எல்லோரையும் பார்க்கும்போது நான் அன்று எண்ணிய விடயங்கள் எல்லாம் இன்று நிறைவேறிவருவதை எண்ணி மன மகிழ்ச்சியடைகின்றேன். இதே போன்றே இந்நிறுவனம் சார்ந்தோர் அனைத்து வளங்களையும் பெற்று, எவருக்கும் அஞ்சாது உங்களது கடமைகளை சரிவரச் செய்யுங்கள் உயர்ச்சி கிடைக்கும் என வாழ்த்தினார்.

யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு பொ.மோகன் அவர்கள்.தனது உரையின்போது ,

யாழ். மாவட்டத்தில் பனை தென்னை வள சங்கங்கள் நிதி வளத்தில் தம்மை தக்கவைத்துள்ளதையும் சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தளம்பல் நிலையில் செயற்பட்டுக்கொண்டிருப்பதையும் என்னால் அவதானிக்க முடிகின்றது. பனைவள நிறுவனத்தினை நிர்வகிக்கின்ற நிர்வாகிகள், பணியாளர்கள் இதய சுத்தியோடு செயற்பட்டு உங்கள் நிறுவனங்களை நிலைத்திருந்து சேவையாற்றத்தக்க வகையில் ஒவ்வொருவருடைய பணியும் அமைய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு சு.கணேஸ் அவர்கள் தனது உரையில்,

வடமாகணத்தில் 5 மாவட்டங்களிலும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் என நான் கடமையாற்றியுள்ளேன். ஏனைய மாவட்டங்களிலுள்ள கூட்டுறவு அமைப்புக்களின் செயற்பாடுகளோடு, யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு அமைப்புக்களின் செயற்பாடுகள், குறிப்பாக பனை தென்னை வள கூட்டுறவு சங்கங்களின் செயற்பாடுகளை ஒப்பிட்டு பார்க்கும்போது, இங்கே சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் தொடர்ந்தும் சிறப்பாக முன்னெடுக்கப் பட்டுவருகின்றமை பாராட்டுக்குரியதே. காரணம் இச்செயற்பாட்டுக்கு என தனியே மாதாந்தம் நிதிகள் ஒதுக்கப்பட்டு உரிய கணக்குகளில் வைப்புச் செய்யப்படுவதன் மூலமே இச்செயற்பாட்டை மேற்கொள்ள முடிகிறது.

இன்றைய இந்நிகழ்வைப் பார்க்கும்போது மண்டபம் நிறைந்த அங்கத்தவர்கள், பணியாளர்கள் அவர்கள் சார்ந்த பிள்ளைகள் நிறைந்திருப்பதையும், இங்கே மேடைக்கு அருகிலே அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்ற பல இலட்சம் ரூபா பெறுமதியான பரிசுப் பொருட்களினைப் பார்க்கும்போது இன்றை நிகழ்வின் கனதி புரிகின்றது.

எனது கூட்டுறவுச் சேவையில் மற்றவர்கள் தருகின்ற பரிசுப் பொருட்களை நான் வழங்கி உள்ளேன். இன்றைய இந்நிகழ்வில் 5ம் ஆண்டு புலமைப் பரிசில் சித்திபெற்ற மாணவர்களுக்கு என்னால் இயன்ற பாடசாலை உபகரணங்கள் அடங்கிய ஒரு சிறிய பொதியை வழங்குவது எனக்கு மன நிறைத் தருகின்றது எனத் தெரிவித்தார்.

மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் திரு சுஜீந்திரன் அவர்கள் தனது உரையில்,

கூட்டுறவு அமைப்புக்கள் தங்களுடைய நிதி வைப்புத் தொடர்பாக அனைத்து நடவடிக்கைகளையும் மக்கள் வங்கி ஊடாகவே மேற்கொண்டு வருகின்றன. அந்த வகையில் பனை தென்னை வள சங்கங்களும் தங்களுடைய நிதி வைப்புக்களை எமது வங்கியின் மூலமே மேற்கொண்டு வருகின்றன. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளிலும் கூட்டுறவு நிறுவனங்களின் நிதியினைப் பாதுகாத்து வழங்கியது எமது வங்கியே. கூட்டுறவு அமைப்புக்கள் ஆரம்பகாலம் தொட்டு இன்று வரைக்கும் எம்மோடு இணைந்து செயற்படுவதன்மூலம் வங்கியினுடைய சேவைகளை நாம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி வருவதோடு, இனிமேலும் எம்மாலான உதவிகளை சங்கங்களுக்கு வழங்குவோம் எனத் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வில் சிறந்த அங்கத்தவர், பணியாளர்களுக்கு பொன்னாடை அணிவித்து பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதோடு, சமாசத்தால் நடத்தப்பட்ட 94வது கூட்டுறவுதின விழா போட்டிகளில் வெற்றி பெற்ற வெற்றியாளர்களுக்கான பரிசில்களும், புலமைப்பரசில் சித்தி பெற்ற மாணவர்கள், உயர் கல்வி வாய்ப்பு பெற்ற மாணவர்கள், மற்றும் போட்டிகளில் வெற்றிபெற்ற முன்பள்ளி மாணவர்கள் ஆகியோருக்கும் பரிசில்களும் ரொக்கமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இதில் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், செயலாளர்கள், பணியாளர்கள், மகளிர்குழு உறுபபினர்கள். முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பனை எழுச்சிவாரம் .............. ( 1ம் பக்கத் தொடர்ச்சி )

இக்கண்காட்சியின் சிறப்பம்சமாக வாரம் முழுவதும் மதியம் ஒடியல் கூழும் மாலை இனிப்புக்கூழும் சித்தமருத்துவக் கூட்டுறவுச் சங்கத்தால் இலைக்கஞ்சியும் வழங்கப்பட்டது மட்டுமன்றி, மாலை வேளையில் மாவட்டம் சார்ந்த கலை நிகழ்வுகளும் சிறப்பாக அரங்கேற்றப்பட்டிருந்தமையானது பொதுமக்களின் வரவேற்பபைப் பெற்றிருந்தது.

இக்கண்காட்சியில் பனை வளம் சார்ந்த உபஉணவு உற்பத்திப் பொருட்கள், கைப்பணிப் பொருட்கள், வீட்டு அலங்காரப் பொருட்கள் போன்ற பலதரப்பட்ட பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டதோடு, விற்பனையும் செய்யப்பட்டது. இதேபோல் சித்த மருத்துவ சங்கமும் தனது சித்த மருந்து உற்பத்திகளை காட்சிப்படுத்தியதுடன் விற்பனையும் செய்தது.

இக்கண்காட்சியை பார்வையிட வந்திருந்தவர்களில் பலர் ஆவலுடன் பனைவளம் சார்ந்த பொருட்களை வாங்கிச் சென்றதை காணக்கூடியதாக இருந்தது.

வடக்கு கூட்டுறவு அமைச்சின் இம்முயற்சியானது கடந்த புவருடம் ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடமும் சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சியை தொடர்ச்சியாக வருடந்தோறும் நடத்துவதன்மூலம் பனைவளம் சார்ந்த நிறுவனங்கள் உபஉணவு உற்பத்தியில் ஈடுபடுவதை ஊக்குவிப்பதுடன், பொருளாதார ரீதியில் முன்னேற்றமடையவும் வாய்ப்பு ஏற்படும்.

இக்கண்காட்சியில் ஈடுபட்ட சங்கங்கள் சுமார் 19 இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதிக்கு தமது உற்பத்திகளை விற்பனை செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## பனை எழுச்சிவாரம்........

(1ம் பக்கத் தொடர்ச்சி )

கொண்டிருந்தது. புதிய கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த மாதம் முதல் தனது செயற்பாடுகளை புதிய கட்டடத்துக்கு மாற்றியுள்ளது.

தற்பொழுது இச்சங்கம் புதிய கட்டடத் தொகுதியில் சித்த மருந்து, மற்றும் பற்பொடி போன்ற உற்பத்திகளை புதிய நவீன இயந்திர சாதனங்கள் ஊடாக மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## அன்னைக்கோர் கவி

S.கமலேஸ்வரி



புருவம் நெற்றி ஏற இருவிழி
வைத்திறல் புவனமதில்
வாழும் பூச் செறியும்
தரை மண்ணும்
தலை தொழவும்
தாயே நின் அன்பிற்கு.

செறிந்து காணும்
கலையின் பொருளும்
சிறந்த செயலும்
சீரிய அறமும் செய்து
நிறைந்த இன்ப வாழ்வில் காண
கற்றுத்தந்த என் தாயே
கரம் தொழுவேன் என்நாளும்

காற்றும் கண் எதிர்
கனல் மண் புனலும்
வண்ணமய நனவும்
திகட்டுகிற திறனும்
திறம் படும் செயலும்
நாற்றிசை எண்திசை
ஏற்புடன் போற்றிட
வணங்குகிறேன் என்தாயே
பணிகிறேன் பண்புடன்.


எமது உற்பத்தி வியாபார நடவடிக்கைகள்

- பனைவெல்லம்
- கல்லாக்காரம்
- பாணிப்பனாட்டு
- பனாட்டு
- ஒடியல் மா
- புளுக்கொடியல் மா
- போத்தலில் அடைத்த பதநீர்
- போத்தற் கள்
- பனம்பாணி




எமது சேவைகள்

❖ கல்வி ஊக்குவிப்புத் திட்டங்கள்
- முன்பள்ளிகளை நிர்வகித்தல்.
- உறுப்பினர், பணியாளர், மகளிருக்கான -கல்விப் பயிற்சி



❖ கிராமிய வங்கிச் சேவை
- அங்கத்தவர் கட்டாய சேமம் பேணல்.
- அங்கத்தவருக்கு கடன் வழங்கல்.

❖ மகளிர் அபிவிருத்தி திட்டம்
- தையல், அழகுக்கலைப் பயிற்சி
- சுயதொழில் ஊக்குவிப்பு



பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

பிரதான வீதி, பண்டத்தரிப்பு

தொலைபேசி: 021 300 1952


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2016ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வெளியிடப்பட்டது.